# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை முஸ்லிம் கல்வி: அண்மைக்கால பல்கலைக்கழக அனுமதி பற்றிய மதிப்பீடு

**M.S.M.Jalaldeen**
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
*msmjalaldin@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்:** இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் ஒரு தேசிய இனமாகும். இரண்டாவது சிறுபான்மை இனமாக வாழும் இலங்கை முஸ்லிம்கள் 2012 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி 9.7 வீதமாக காணப்படுகின்றனர். இலங்கை சுதேசிகளின் கல்வி வரலாற்றில் ஏற்பட்ட எழுச்சியும், வீழ்ச்சியும் அந்நிய ஆட்சியில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களும் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றிலும் ஏற்பட்டுள்ளதை வரலாற்று ரீதியாக நாம் அறியலாம்.எமக்குக் கிடைக்கின்ற வரலாற்று ஆவணங்களில் இலங்கை முஸ்லிம்கள் அந்நிய ஆட்சியில் குறிப்பாக போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் பொருளாதார, அரசியல், கலாசார ரீதியாக மிகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தினர்களாகக் காணப்பட்டனர். அவ்வாறே அவர்களது கல்வித்துறையும் திட்டமிட்ட முறையில் படிப்படியாக அழிக்கப்பட்டது. பௌத்தர்களும், தமிழர்களும் அந்நிய ஆட்சியினர் அறிமுகப்படுத்திய ஆங்கில மொழியிலான புதிய கல்விக் கொள்கையினால் ஓரளவு பலன்பெற்று கல்வி முன்னேற்றம் பெற்ற கால கட்டத்தில் இலங்கை முஸ்லிம்கள் தம்மிடையே காணப்பட்ட மரபு ரீதியான கல்வி முறையிலும் ஆழமான வீழ்ச்சியைக் கண்டனர். குறிப்பாக மிஷனரிக் கல்வியின் அபாயத்தை உணர்ந்ததால் தமக்கான கல்வித்துறையை வளர்த்து கொள்வதில் அதிக அக்கறையின்றி காணப்பட்டனர். இலங்கையின் ஏனைய சமூகத்தினரை விட முஸ்லிம்கள் 60 வருடங்கள் கல்வியில் பின்னோக்கிக் காணப்பட்டனர். பிரித்தானியர் ஆட்சியின் பிற் பகுதியில் இலங்கை முஸ்லிம்களிடையே கல்வியில் ஒருவித மறுமலர்ச்சி ஏற்படுவதை நாம் ஆய்வு ரீதியாக அறியலாம். இம்மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஒருவராக அறிஞர் சித்தி லெப்பை காணப்படுகின்றார்.1890ஆம் ஆண்டுகளில் ஏற்படத் தொடங்கிய முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சி ஏற்ற இறக்க அம்சங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டு பல்கலைக்கழக அனுமதியிலும் ஏற்பட்ட மாற்றங்கள் முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி வரலாற்றில் மறுமலர்ச்சிக் கால கட்டங்களாகும். இக்கட்டுரை இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் ஏற்பட்ட பல்வேறு கட்டங்களை ஆய்வு செய்வதுடன் முஸ்லிம் மாணவர்களின் அண்மைக்கால பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் ஆராய முயலுகின்றது.

**திறவுச் சொற்கள்:** கல்விக் கால கட்டங்கள், பிரித்தானியர், பல்கலைக்கழகம், முஸ்லிம்கள்,மறுமலர்ச்சி இயக்கங்கள்

## ஆய்வுப் பிரச்சனை: (Research Problem)

‘‘இலங்கை முஸ்லிம்களின் கல்வித்துறை முன்னேற்றம் கண்டு வருகின்றது.’’

## நோக்கங்கள்: (Objectives)

- இலங்கை முஸ்லிங்களின் கல்வி வரலாற்றின் சில முக்கிய காலங்களை ஆய்வு செய்தல்.
- கல்வி அபிவிருத்திக்கான கால கட்டங்களில் இருந்து முன்னேற்றத்திக்கான காரணங்களை இனங்காணல்.
- சமகால முஸ்லிம்களின் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆய்வு செய்தல்.

## ஆய்வு முறை (Research Method)

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்பசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இஸ்லாமும் கல்வியும்

இஸ்லாமும், கல்வியும் ஒன்றோடொன்று பின்னிப் பினைந்த அம்சங்களாகும். இஸ்லாத்தின் புனிதமிக்க வேதநூலாகிய அல்குர்ஆனின் ஆரம்ப வசனமே ''இக்ரஹ்'''ஓதுவீராக' என்ற அறிவுரைக் கட்டளையுடனேயே நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டமை, அறிவுபற்றிய இஸ்லாத்தின் எண்ணக் கருவுக்கு சிறந்த சான்றாகும். இஸ்லாத்தின் கல்விக் கொள்கை பற்றி பேராசிரியர் ஏ.ஜே.ஆபெரி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''மனிதனின் பெருமைக்கும், நன்றியுடமைக்கும், இஸ்லாம் பலவிடங்களில் காரணமாயிருக்கின்றது. கலை, இலக்கியம், விஞ்ஞானம், அரசியல் ஆகிய துறைகளிலே இஸ்லாமியர் ஆற்றிய தொண்டுகளைப் பற்றி நிறைய எழுதப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக இஸ்லாமியர் கல்வியிலே காட்டிய பக்தியோடு கூடிய ஆர்வம் இல்லாவிட்டால் மேற்கூறிய வெற்றிகள் எவையும் இவர்களைக் கிட்டியிருக்கமாட்டாது. ''சீனா தேசம் சென்றாயினும் கல்வியைக் கல்''என்ற திரு நபியின் கட்டளைக்கு முஸ்லிம் ஆணும் பெண்ணும் தலை சாய்த்து நின்றனர்.''(Mohammed Halafi, 1954)

இஸ்லாத்தின் வரலாற்றில் இடம்பெற்ற ஒவ்வொரு சம்பவங்களும் கல்வியின் கண்ணியத்தையும் அதன் அவசியத்தையுமே வலியுறுத்துகின்றன. நபி (ஸல்) அவர்களது ''அறிஞனாக இரு, அல்லது அறிவைத் தேடுபவனாக இரு, அல்லது அறிவைச் செவிமடுப்பவனாக இரு, நான்காம் நபராக இராதே'' என்ற வாயுதிர் முத்து முதல் இஸ்லாமிய அறிவு நிலையங்களும், கலைக் களஞ்சியங்களும் மங்கோலியப் படைகளால் அழிக்கப்படும் வரையுள்ள ஒவ்வொரு சரித்திரத் துணுக்குகளும், இஸ்லாம் கல்விக்கூட்டிய களத்தை வளத்தை பறைசாற்றுகின்றன. உரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட அழிவைக் குறிக்கும் முகமாக வரலாற்றாசிரியர்கள் இக்காலப் பகுதியை ''இருண்ட சகாப்தம் என்று அழைத்தாகள். ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையில் வாழ்ந்த மக்கள் அறியாமையில் மூழ்கியிருந்தார்கள். இக்காப் பகுதியில்தான் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளில் கல்வி என்னும் ஒளி சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருந்தது.

இப்பின்னணியில்தான் அரபிகளது வழித்தோன்றல்களாக இலங்கையில் வாழ்ந்து வந்த முஸ்லீம்களும் அவர்களின் ஆரம்ப குடியேற்ற காலங்களில் அறிவுத்

தீபத்தை அணையாத் தீபங்களாக ஏற்றி, வரலாற்றில் முத்திரை பதித்தார்கள். மேற்காசியாவில் பிரபல்யம் அடைந்திருந்த வைத்திய முறையை இலங்கைக்கு அறிமுகம் செய்தவர்கள் முஸ்லீம்களே. 1827ம் ஆண்டில் சேர் அலக்சாண்டர் ஜோன்சன் பிரித்தானிய அரசாங்க செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் ''அவிசென்னாவின் (இப்னுசீனா) வைத்திய கருத்துக்களை இலங்கையில் புகுத்தியவர்கள் முஸ்லீம்களே. அரேபியர்களது வழித்தோன்றல்களான இலங்கை முஸ்லீம்கள் என்னிடம் அடிக்கடி கொண்டு வந்த நூல்களில் கிரேக்க தத்துவ ஞானிகளான பிளேட்டோ, அரிஸ்ரோட்டல், யூக்லிக்கேலன்,தொலமி போன்றவர்களது நூல்களின் அரபு மொழி பெயர்ப்புக்களை என்னிடம் கொண்டு வந்து காட்டுவார்கள்'' என்று குறிப்பிடுகின்றார்.(Mohammed Sameem, 1993)

ஆனால், வரலாற்றின் காலவோட்டத்தில் இலங்கை முஸ்லீம்களின் கல்விக் கொள்கை சான், முழமாக சரிந்து சரித்திரத்தின் சாக்கடைக்கே இட்டுச் செல்லப்பட்டது.

## கல்வி வரலாற்றின் கால கட்டங்கள்

சுதந்திரத்துக்கு முன் இலங்கை முஸ்லீம்களின் கல்வி வரலாற்றை ஆய்வு செய்யும்போது மூன்று பிரிவுகளாக வகுத்து நோக்க வேண்டியுள்ளது.

அ. நிதர்சனமானசரித்திரத் தகவல்களற்ற காலப் பிரிவு

ஆ. கல்வியிக் மிகப் பின்தங்கியிருந்த காலப் பிரிவு

இ. கல்வியின் எழுச்சிக்கு வித்திட்ட காலப் பிரிவு

### நிதர்சனமான சரித்திரத் தகவல்களற்ற காலப் பிரிவு:-

இலங்கையின் வரலாற்றில் போர்துக்கேயரும், ஒல்லாந்தரும் ஆட்சி செய்த கி.பி. 1505 முதல் கி.பி. 1796 வரையுள்ள சுமார் 291 வருடங்களை உள்ளடக்கிய 16,17,18ம் நூற்றாண்டுகளையே நிதர்சனமான தகவல்களற்ற காலப் பிரிவாக வகைப்படுத்த வேண்டியுள்ளது. இக்கால பிரிவில் இலங்கை முஸ்லீம்களின் கல்வி வரலாறு பற்றி மட்டுமல்ல அவர்களின் பொருளியல், அரசியல், சமூக, சமய, சர்வதேசத் தொடர்புகள், நிலைப்பாடுகள் பற்றிகூட தெளிவான நிதர்சனமான சரித்திரத் தகவல்களை நாம் பெற முடியாதுள்ளது.

இலங்கையில் காணப்பட்ட மக்தப், மத்ரஸா கல்வி முறைகள் அரபு நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த முஸ்லீம்களால் ஆரம்ப காலத்திலிருந்தே அரபு நாடுகளின் பாணியில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி நிலையங்களாகும். இஸ்லாமியக் கல்வி மரபின்படி கல்வி, சமய சம்மந்தமாயினும் சரி, விஞ்ஞான சம்மந்தமாயினும் சரி திருக்குர்ஆனிலிருந்தே தூண்டுதலைப் பெறுகின்றது. எனவேதான் இலங்கை முஸ்லீம்களின் ஆரம்பக் கல்வி நிலையங்களாக மக்தப்கள், முஸ்லீம்களின் நாளாந்த வணக்கத்தை நிறைவேற்றும் மத்திய ஸ்தலங்களாகிய பள்ளிவாசல்களுடன் இணைக்கப்பட்டு அங்கு குர்ஆன் ஓதவும், மனனமிடவும், கற்றுக்கொடுக்கப்பட்டதுடன், வாசிப்பு, எழுத்து. இலகுவான எண்கனிதம் என்பனவும்

கற்பிக்கப்பட்டன. அத்தோடு ‘‘அதப்’’ எனப்படும் நற்பழக்கவழக்கங்களும் கற்பிக்கப்பட்டன. அமைப்பிலும் பாடத்திட்டத்திலும் பள்ளிவாசலுடன் தொடர்புடையதாக இருந்ததால் ஒவ்வொரு பட்டணத்திலோ கிராமத்திலோ ஒவ்வொரு முஸ்லிம் பகுதியிலும் ஒவ்வொரு மக்தப் இருந்தது. அரசாங்கத்திடமிருந்து எவ்வித பண உதவி பெறாமலும் வேறு தாபனங்களால் வழிகாட்டப் பெறாமலும் மக்தப்கள் தாமாகவே இயங்கி வந்தன. அவற்றின் பாடவிதானம் வரையறை உடையதாக இருந்தமையால் அவற்றுக்கு பெரிய நூல்நிலையங்களோ வேறு உபகரணங்களோ தேவைப்படவில்லை. எனவே மத்திய கால முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை அறிவையூட்டும் தாபனமாக மக்தப் திகழ்ந்தது.

### மறுமலர்ச்சி இயக்கங்களும் கல்வி மேம்பாடும்

பௌத்த, ஹிந்து மக்களிடையே கிறிஸ்தவத்துக்கும், பிரித்தானிய ஆட்சிக்கும் எதிராக கி.பி 1880ஆம் ஆண்டளவில் இலங்கையில் துளிர்விட்ட மறுமலர்ச்சி இயக்கங்களின் பின்னணியில், இலங்கை முஸ்லிம்களிடையே தோன்றிய மறுமலர்ச்சி சகாப்தத்தோடு இக்காலப்பிரிவு ஆரம்பமாகின்றது. பௌத்த மக்களில் அக்காலப்பிரிவில் வண. ஹிக்கடுவ சுமங்கல தேரோவும் , அநகாரீக தர்மபாலாவும், ஹென்றி ஒல்கோட்டும் தோன்றி பௌத்த மறுமலர்ச்சிக்கும், தமது சமய மேம்பாட்டுக்கும் குரல் கொடுத்தார்கள். ஹிந்துக்களை ஸ்ரீ ஆறுமுக நாவலர் மறுமலர்ச்சியின்பால் வழிநடாத்திக் கொண்டிருந்தார். இவர்களின் மறுமலர்ச்சித் தோற்றமும் புத்துணர்வுகளும் இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளை தட்டி எழுப்ப இறைவனின் நல்லருலால்இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இவ்வாறு ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தை திறன்பட நடாத்திச் செல்லக்கூடிய இருவர் ஏககாலத்தில் தோன்றினர். ஒருவர் இலங்கையிலேயே கண்டி மாநகரில் தோன்றிய மறுமலர்ச்சி தந்தை எம்.ஸீ சித்திலெப்பை அவர்களாகும். அவருக்கு உந்துசக்தியாக இருந்தஎகிப்தில் இருந்துஅரசியல் புரட்சிக் குற்றத்துக்காக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒராபிபாஷாவுமே (கி.பி 1883-1901). இவ்விருவரும் ஒன்றாகச் சேர்ந்து இலங்கை முஸ்லிம்களின் அரசியல், கல்வி. சமய, சமூக பின்னேற்றத்துக்கான காரணங்களையும், தேக்க நிலமையையும் மிக உன்னிப்பாக ஆய்வு செய்து அவற்றை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டனர். கி.பி 1889 வரை சட்ட சபையில் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஒருவர் முஸ்லிம்களில் இல்லாமல் இருந்ததும்,‘‘முஸ்லிம்களும் இனத்தால் தமிழர்களே’’ என்ற சேர். பொன்னம்பலம் இராமநாதனின் வாதமுமே இவர்களின் சிந்தனையை மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்களின் மனோபாவத்தையும், எண்ணக் கருத்தையும் தீவிரப்படுத்தியது. (K.D.G. Wimalaratne, 1986)

பலகாலமாக அரசாங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகளிலிருந்து பயனைப் பெற்றுக்கொள்ள முஸ்லிம் சமுதாயம் தயங்கிய போதிலும் 1890 –

1900ஆம் ஆண்டுகளின் முற்பகுதிகளில் அவர்கள் ''தாமாகவே முயற்சி செய்தனர்'' என்று சொல்ல இடமுண்டு. அவர்கள் தம்மை இதுகாறும் ஏனைய சமுகங்களுடன் போட்டியிட விடாது தடைசெய்தவற்றிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என எண்ணினர். இம்மாற்றத்திற்கு கௌரவ எம்.சி. அப்துர் றஹ்மான் அவர்களின் செல்வாக்குடைய உதவியுடன் ஜனாப் எம்.சி. சித்தி லெப்பை அவர்கள் இடைவிடாது செய்த முயற்சியே காரணமாகும்.

கி.பி 1838இல் பிறந்த எம்.ஸி சித்திலெப்பை, இலங்கை முஸ்லிம்களிடையே கல்வியை மேம்படுத்தும் இயக்கத்தின் முன்னோடியாக கருதப்படுகின்றார். ஒராபிபாஷாவும் அவரது வழிகாட்டியாக கருதப்படுகின்றார். இவ்விருவரும் இணைந்து முஸ்லிம்களின் கல்வி வீழ்ச்சியின் காரணங்களை கோடிட்டுக்காட்டி உடனடியாக முஸ்லிம்கள் கிறிஸ்தவ மிஸனரிகளின் பாடசாலைக்குச் செல்லுமாறு முஸ்லிம்களைத் தூண்டினார்கள். முஸ்லிம் பெண்களும் கல்வி கற்பதன் அவசியத்தை வலியுறுத்தினர். ஏனெனில் சித்திலெப்பை ஆங்கிலக் கல்வியின் மூலம் அதிகம் நன்மை அடைந்தவராகக் காணப்பட்டார். அவர் ஒராபிபாஷாவுடன் இணைந்து முஸ்லிம்களிடையே ''கல்வி இயக்கம்'' ஒன்றை ஏற்படுத்தினார். இலங்கை முஸ்லிம்களின் கல்வித் துறையை மேம்படுத்துவதிலான சித்திலெப்பையின் முயற்சிகள் ஒராபி பாஷாவின் இலங்கை விஜயத்திற்கு முன்பே தொடங்கியது. இதன் காரனமாகவே கி.பி. 1882 டிசம்பர் 22இல் அவர் ஆரம்பித்த ''முஸ்லிம் நேசன்'' என்ற சஞ்சிகையில் இலங்கை முஸ்லிம்களின் பிற்போக்கான நிலமையை நிதர்சனமாக எழுதி அதனை சீரமைப்பதில் ஆலோசனைகளையும் முன் வைத்தார். சித்திலெப்பை அவர்கள் ஒரு வரலாற்றாசியராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், மார்க்கப்பற்று மிகுந்த ஒரு இஸ்லாமிய அறிஞராகவும், ஆலிமாகவும் விளங்கினார். இவர்கள் இருவரின் முயற்சிக்கு நிதி சம்பந்தப்பட்ட விடயங்களில் தாராளமாக உதவியவர்தான் ஏ.எம். வாப்பிச்சி மரைக்கார் அவர்களாகும்.

மேல்நாட்டு கல்வி அறபு மொழியுடனும், இஸ்லாமிய மதக் கல்வியுடனும் புகட்டப்பட வேண்டுமென்று உணர்ந்த இத்தலைவர்கள் 1884ஆம் ஆண்டு ''அல் மத்ரஸதுல் கைரியத்துல் இஸ்லாமியா'' என்ற பாடசாலையை சோனகத்தெருவில் நிறுவினார்கள். இப்பாடசாலைதான் பின்னர் ஹமீதியா ஆங்கிலப் பாடசாலை என அழைக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் அரசாங்கமும், முஸ்லிம்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த சில முயற்சிகளை மேற்கொண்டது. 1890ஐ அடுத்த பத்தாண்டுகளில் முஸ்லிம் பிள்ளைகளின் வரவு பாடசாலைகளில் மிகவும் குறைவாக காணப்பட்டதால்,'பொதுப் போதனைத் திணைக்களம்' முஸ்லிம் பிள்ளைகளை அரசாங்க பாடசாலைகளில் சேர்ப்பதற்கு ஒருவழிகாண முயன்றது.

இக்காலப்பகுதியிலும் இலங்கை முஸ்லிம்கள் தமது பண்டைய ‘மக்தப்’ பாடசாலை அமைப்பிலேயே ஊறி இருந்தார்கள். பெரும்பாலும் ‘மக்தப்’ படிப்பை முடித்த அறிவுத் திறன் வாய்ந்த முஸ்லிம் மாணவன், இலங்கையிலோ, அல்லது இந்தியாவிலோ உள்ள ‘‘மத்ரஸாக்க’’ளிற் சேர்ந்து படித்து சமூகத்திலே செல்வாக்கைப் பெறும் ‘ஆலிமாக’திகழ்வான். மாணவர்கள் மக்தப்களுக்கு செல்லவேண்டியது அவர்களின் சமயக் கடப்பாடு என்றும், உலகியற் கல்வி எவ்வளவு உபயோகமானதாயினும், அதற்காக சமயக் கல்வியை அலட்சியம் செய்தலாகாது என்றும் ஆலிம்கள் வற்புறுத்தினர்.

எனவேதான், 1884ஆம் ஆண்டு மேற்குலகக் கல்வி அமைப்பின் அடிப்படையில் நிறுவப்பட்ட முதலாவது முஸ்லிம் பாடசாலையான ‘‘அல் மத்ரஸதுல் கைரியத்துல் இஸ்லாமியா’’ பாடசாலையிலும், மக்தப் கல்வி முறையிலான அறபு மொழி அல்குர்ஆன் ஓதுதல், ஹதீஸ்,mjg;’ எனப்படும் நல்லொழுக்கம் என்பவற்றை முந்நிலைப்படுத்தி இணைத்தே மற்றப் பாடங்களையும் சேர்க்க வேண்டியிருந்தது. தமிழ் பிரதேசங்களில் தமிழ் - கிறிஸ்தவ மிஷனரிகளின் முயற்சியினால் முதல் பாடசாலை 1814இல் தோற்றுவிக்கப்பட்டது. எனவே இலங்கையில் தமிழ் மக்களின் முதல் பாடசாலை தோற்றம் பெற்று சுமார் எழுபது ஆண்டுகளுக்குப் பின்னரே முஸ்லிம்களின் முதல் பாடசாலை நிறுவப்பட்டது.முஸ்லிம் சமுதாயச் சிற்பிகளால் முதல் பாடசாலை கொழும்பில் அமைக்கப்பட்ட போதும், அது முஸ்லிம்களின் ஆதரவைப் பெறாமல் சிறிது (ஆரம்ப) காலம் தூங்கும் நிலையிலேயே இருந்தது. (K.D.G. Wimalaratne, 1986)

இக்காலப் பகுதியில் பௌத்த, ஹிந்து சமய மறுமலர்ச்சியும் கல்வி மேம்பாடுகளும் மிகவும் உன்னத நிலையில் இருந்த கிறிஸ்தவ மிஷனரிகளுக்கே பெரும் சவாலாக கல்வி பரம்பரையைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தன. வடபகுதியிலுள்ள தமிழ், ஹிந்து மக்கள் மத்தியிலும் இவ்வாறான சமய, கல்வி, மறுமலர்ச்சி மிக உன்னதமான நிலையில் தோற்றமெடுத்தது. 1888 இல் ஸ்ரீ ஆறுமுகநாவலர் மற்றும், இந்திய ஹிந்து சங்கங்களின் தூண்டுதலினால் சைவ மலர்ச்சிக்காக சைவ பரிபாலன சபை நிறுவப்பட்டதோடு ‘இந்து சாதனம்’ என்ற மாதமிருமுறை பத்திரிகைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட்டு வந்தனர். பல நூல்கள் வெளியிடப்பட்டதுடன், பல மகாநாடுகளும் கூட்டப்பட்டன. ( G.C.Mendis, 1960)

இவ்வாறு பௌத்த. சைவ மறுமலர்ச்சியாலும், அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளினாலும், இலங்கையில் 1872இல் சுமார் 10,852 மாணவர்களைக் கொண்ட 200 அரசாங்கப் பாடசாலைகளும், 25,443 மாணவர்களைக் கொண்ட 402

உதவி நன்கொடை பெறும் பள்ளிக் கூடங்களும் காணப்பட்டன. 1890 இல் பாடசாலைகள் இரண்டு வீதமும், மாணவர்கள் மூன்று வீதமும் அதிகரித்து. மொத்தம் 1416 பாடசாலைகள் இலங்கையில் கல்வி அபிவிருத்தியில் பங்களிப்பு நல்கியது.
( G.C.Mendis, 1960)

இவ்வாறு பௌத்த, இந்து சமயங்களின் தீவிர பிரசாரங்களும், கல்வி மறுமலர்ச்சியும், புனரமைப்பும் அதன் ஆரம்பப் படிகளில் காலடி வைத்த கி.பி. 1850 – 1875ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் முஸ்லிம் சமூகம் இவற்றைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருந்ததில் வியப்பில்லை. முஸ்லிம்கள் தமது ஈமானில், இறை நம்பிக்கையில் கொண்ட உறுதியான பற்றுதலினால், மேற்குலக ஆங்கிலக் கல்விகளையே உதாசீனம் செய்து தமது சமுதாய மக்களையும் எண்ணங்களையும் பூரணமாகக் காப்பாற்றிக் கொண்டார்கள். கிறிஸ்தவ மதப் பிரச்சாரத்தில் இஸ்லாமிய இயக்கத்தில் ஒரு சருகு கூட இரையாகவில்லை என்பது வரலாற்றுப் பாடமாகும். ஆனால், இக்கல்வியின் ஏணிப்படிகளில் நாம் மிகப் பின்தங்கியிருந்தோம். நவீன கல்வி அமைப்பில் ஏனைய சமூகங்களைவிட அதளபாதாளத்தில் நாம் வீற்றிருந்தோம், என்பதையும், அப்பின்னடைவு இன்றும்கூட எமது சமகால ஏனைய சமூகத்தினரைவிட சுமார் அரைநூற்றாண்டுக்கப்பால் எம்மைத் தள்ளிவிட்டது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மக்களின் குறைகளையும், தேவைகளையும் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு தெரிவிக்கும் ஒரு உரிமைக்குரலாக (Sounding body)சட்ட நிர்ணய சபை (Legislative Council)அமைக்கப்பட்டது. இதன் அங்கத்தவர்கள், காலனித்துவ நாட்டில் காணப்படும் பல்வேறு சமூகங்களையும் பிரதிநிதித்துவ படுத்தும் வகையில் ஒவ்வொரு சமூகத்தின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக 1834ம் ஆண்டு இலங்கையில் அமைக்கப்பட்டது. கோல்புறூக் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கேற்ப அமைக்கப்பட்ட இச்சட்டசபையின் பூர்வாங்க எற்பாடுகள் முடிவுற்றபோதும், ஆங்கிலத்தில் உரையாற்ற,வாதிடக்கூடிய யாரும் இல்லாததால் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களை நியமனம் செய்வதில் ஆளுனர் தாமதம் காட்டினார். சட்டசபையின் அடிப்படையான வடிவமைப்பில் முஸ்லிம்களுக்கென பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களின் பிரதிநிதித்துவம் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தோடு இணைக்கபட்டிருந்தது. எனினும் கி.பி. 1835இல் ஜே.ஜி பிலிப்ஸ் பண்டிதரத்னவும், ஏ. குமாரசுவாமி புள்ளேயும், சிங்கள தமிழ், மக்களின் பிரதிநிதிகளாக நியமிக்கபட்டார்கள். கி.பி 1879ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் பிரதிநிதியாக சேர், பொன்னம்பலம் இராமனாதன் நியமனம் பெற்றார். கி.பி. 1879ம் ஆண்டில்கூட இச்சட்டசபையில் வாதங்களிலும், உரையாடல்களிலும் ஆங்கிலத்தில் உரையாற்றக்கூடிய முஸ்லிம் யாரும் இல்லை என்பதை காரணம் காட்டி, முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை மீண்டும் சேர். பொன்னம்பலம்

இராமனாதனுக்கே வழங்கப்பட்டது. இவ்வாறு 10 ஆண்டுகள்(கி.பி 1889 வரை) இவரே முஸ்லிம்களின் பிரதிநிதித்தவத்தை வகித்தார்.இதன் மற்றொரு பிரதிபலிப்பாக பென்னம்பலம் இராமனாதன்,‘‘முஸ்லிம்களும் இனத்தில் தமிழர்களே’’ எனவே அவர்களுக்குத் தனியானதோர் பிரதிநிதித்துவம் தேவை இல்லை என வாதிட்டார். அப்போது மிக இளைஞராக காணப்பட்ட ஐ.எல். எம் அப்துல் அஸீஸ் இக்கருத்தை மறுதலித்து பகிரங்க கண்டனம் தெரிவித்தார். முஸ்லிம்களில் பலத்த கண்டனங்கள், நடவடிக்கைகளுக்குப் பின்னர் இறுதியாக கி.பி 1889 ஒக்டோர் 29ம் திகதி முஸ்லிம்களின் முதல் பிரதிநிதியாக கண்டியைச் சேர்ந்த எம்.ஸி.அப்துர் ரஹ்மானும், சிங்கள மக்களின் பிரதிநிதியாக கண்டி சிங்களவர் ஒருவரும் நியமிக்கபட்டார்கள். இந்நிகழ்ச்சியே முஸ்லிம்களின் கல்வி எழுச்சிக்கு வித்திட்ட நிகழ்ச்சியாக கருதப்படுகிறது. (K.D.G. Wimalaratne, 1986)

இவ்வாறு இலங்கை முஸ்லிம்கள் இவ்விடைப்பட்ட காலத்தில் கல்வித்துறையில் ஏனைய சமுகங்களைவிட ஒப்பீட்டளவில் மிகப் பின்தங்கிய நிலையில் காணப்பட்டார்கள். இக்கால முஸ்லிம்களின் குடிசனப்பரம்பலோ 6.79 வீதத்துக்கு மேல் இருந்தது. கி.பி 1796இல் சுமார் 50,000 பேராக இருந்த இலங்கை முஸ்லிகளின் தொகை கி.பி 1871இல் 1,63,518 ஆகவும்,1889ல் 184,542 ஆகவும் காணப்பட்டது.எனினும் தமது ஈமானையும், மார்க்கத்தையும் காப்பாற்றுவதற்காகவே இக்கால கட்டத்தில் கிறிஸ்தவ மயமாக்கப்பட்ட மேலை நாட்டுக் கல்வியையும், ஆங்கில கல்வியையும் முற்றாக ஒதுக்கி இருந்தார்கள்.

சித்திலெப்பை ஆரம்பித்த ‘முஸ்லிம் கல்விச் சங்கம்’, முஸ்லிம் பெண்களின் கல்வி நிலையையும், தட்டிக் கழிக்காது, மிக அக்கறையுடன் செயலாற்றியது. ஏனெனில் ஒரு சமுதாயத்தின் அறிவியல் வளர்ச்சிக்கு, அதன் பெண் சமுதாயம் கல்வியுடன் திகழ்வது அவசியம் என உணர்ந்த இச்சங்கம், கண்டியில் முதலாவது முஸ்லிம் பெண்கள் பாடசாலையை இதே காலப் பகுதியில் நிறுவியது. இதன் தலைமை ஆசிரியராக சித்திலெப்பை அவர்களின் சகோதரியே கடமையாற்றினார். இதே போல் மத்திய மாகாணத்தின் பல இடங்களிலும், தமிழ், அரபு பாடசாலைகளை நிறுவிய சித்திலெப்பை அவர்கள், தானே அவற்றை நிருவகித்து நிதிகளையும் வழங்கி வந்தார்கள்.(Silver Jubilee Sounenir, 1965) இக்கால கட்டத்தில் இலங்கை முஸ்லிம் பெண்களின் கல்வி மேம்பாட்டுக்கு, அக்கால தேசாதிபதியின் பாரியாரான லேடி ஹவ்லொக் அவர்கள் ஆற்றிய பங்களிப்பும் நினைவு கூரத்தக்கதாகும். 1894இல் கண்டியில் அரச உதவிபெற்ற நான்கு முஸ்லிம் பெண்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1887ல் குர்ஆனின் அடிப்படையில் அமைக்கப்பட்ட 6 முஸ்லிம் பாடசாலைகளை அரசாங்கம் நிறுவியது.

1900ஆம் ஆண்டில் அரசாங்க உதவிபெற்ற ஆரம்பப் பாடசாலைகளின் புள்ளிவிபரம் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| பௌத்த பாடசாலை | 142 | - | மாணவர்கள் | 18,700 |
| முஸ்லிம் பாடசாலை | 04 | - | மாணவர்கள் | 362 |
| ஹிந்து பாடசாலை | 45 | - | மாணவர்கள் | 6,560 |

இவ்விழிப்புணர்வின் பலனாக, இலங்கையில் சில முஸ்லிம்கள் அரசாங்கப் பொதுப் பரீட்சைகளில்தேறி, அரசாங்க வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகளுக்கும் முதன்முதலாக முகம்கொடுக்க தயாரானார்கள். எனினும் 1911ஆம் ஆண்டு முடிவுறும் வரை முஸ்லிம்கள் உயர் கல்வியில் போதிய அக்கறை செலுத்தியதாகவோ, அவற்றில் வெற்றி கண்டதாகவோ கூறமுடியாது. கி.பி. 1890 தொடக்கம் 1906ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் லண்டன் கேம்பிரிஜ் சிரேஷ்ட பரீட்சையில் இலங்கையில் மொத்தம் 437 மாணவர்கள் தேறியிருந்தார்கள். இவர்களில் 06 பேர் (1.48%) முஸ்லிம் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(K.D.G. Wimalaratne, 1986)

இக்காலப் பகுதியில் தோன்றிய பல்வேறு சமூக, கலாச்சார இயக்கங்களும் முஸ்லிம்களிடையே சமூக, கலாச்சார, கல்வி மேம்பாட்டுக்கு பணியாற்றிக் கொண்டிருந்தன. 1900ம் ஆண்டில் உருவான ‘சோனகர் சங்கம்’ இவ்வகையில் மிகவும் பலம்வாய்ந்த ஸ்தாபனமாக விளங்கியது. அதேபோல் கி.பி. 1910இல் ‘முஸ்லிம் இளைஞர் சங்கம்’(M.Y.M.A)தோன்றி முஸ்லிம் சமுதாய மறுமலர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கியது.

இதேபோல், பல்வேறு இலக்கியப் படைப்புக்களும், சஞ்சிகைகளும், செய்தி நாளிதழ்களும் கூட இக்காலப் பகுதியில் வெளிவந்தன. 1882இல் முதலாவது ‘முஸ்லிம் நேசன்’ என்ற பத்திரிகை உருவாகியது. அதன்பின் 1914ஆம் ஆண்டளவில் “CEYLON MOHAMEDAN” என்ற சஞ்சிகையும் “CEYLON MUSLIM REVIEW”என்ற பத்திரிகையும், 1900ஆம் ஆண்டில் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் மூலம்,ASSAWAAB (அஸ்ஸவாப்) என்ற தமிழ்ப்பத்திரிகையும், 1915இல் ‘முஸ்லிம் கார்டியன்’(MUSLIM GUARDIAN),“CRESENT”,‘இஸ்லாமிய மித்திரன்’(ISLAM MITHRAN)என்ற பத்திரிகைகளும் இவ்வகையில் தோன்றி முஸ்லிம் சமுதாய கல்வி மறுமலர்ச்சிக்கு தூண்டுகோலாய் அமைந்தன.(Silver Jubilee Sounenir, 1965)

இவ்வாறு இலங்கையின் சுதந்திரத்துக்கு முன் இலங்கை முஸ்லிம்களின் கல்வி மேம்பாடு பல்வேறு கல்விமான்களை உருவாக்கினாலும், இவர்களில் பெரும்பான்மையினர் இலங்கையின் தலைநகர் கொழும்பிலேயே பிறந்து கல்வி கற்றவர்களாகக் காணப்பட்டமை இங்கு கவனிக்கத்தக்கது. இதனால் கிராமப்புற பாடசாலைகளின் நிலமையும், முஸ்லிம்களின் கல்வித்துறையும் கொழும்பு பிரதேசத்தைவிட பின் தங்கிய நிலையிலேயே காணப்பட்டதை உணர முடிகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் அக்காலப் பாடசாலைகள் இரண்டு வகையாகக் காணப்பட்டன.

அ) முஹம்மதிய உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள்
ஆ) முஹம்மதிய அரசாங்கப் பாடசாலைகள்

இதில் பின்னைய பகுதி முஸ்லிம் பெண்களும் 10 வயதிற்குறப்பட்ட ஆண்பிள்ளைகளும் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர். இதில் 1903ஆம் ஆண்டில் முன்னைய பிரிவில் 06 பாடசாலைகளும், இரண்டாவது பிரிவில் 7 பாடசாலைகளும் இருந்தன. படிப்படியாக விசேட முஹம்மதிய பாடசாலைகள் செயலிழந்து போக, முஸ்லிம்கள் அரசாங்க கல்விக் கொள்கையுடன் ஒத்துழைத்து, அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்ட சுயமொழி பாடசாலைகளில் கற்று தம்மை கல்வித்துறையில் வளர்த்துக் கொண்டனர். இக்காலப் பகுதியில் முஸ்லிம் பிள்ளைகளின் வரவு வீதமும், மற்ற இனங்களின் வரவு வீதத்துக்கு ஒத்திருந்ததை அவதானிக்கலாம்.

இதேகாலத்தில் முஸ்லிம்களின் கல்வி விடயத்திலும், அதன் முன்னேற்றத்திலும் அதிக அக்கறை செலுத்திய ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், மக்தப்களின் பாடவிதானத்தை சீரமைக்க ஆலோசனை வழங்கியதோடு, பெண் கல்வியின் அவசியத்தையும், மதக் கல்வி சுயமொழியில் போதிக்கப்படுவதையும், பாடங்களுக்காக விசேட புத்தகங்களும், உப பாடப்புத்தகங்களும் எழுதப்பட வேண்டும் என்றும், திருக் குர்ஆன் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

ஆரம்பப் பாடசாலைகளில் அரபு மொழியை இரண்டாவது மொழியில் பயிலவும், முஸ்லிம் பெண்களின் கல்விக்கென விசேட சலுகைகளை வழங்கவும் முஸ்லிம் பெரியார்கள் முடிவு செய்தனர்.

**முஸ்லிம்களின் சமகால கல்விப் போக்கு**

இலங்கை முஸ்லிம்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்ததன் காரணமாக கல்வித் துறையில் சில முன்னேற்றகரமான அடைவுகளை அடையக் கூடிய வாய்ப்புக்கள் இப்போது ஏற்பட்டுள்ளதை ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களினால் மிகவும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகம் கல்வியின் அவசியத்தை உணர தலைப்பட்டுள்ளது. குறிப்பாக 1995இல் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டதன் பின்னர் முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி விகிதாசாரம் ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருவதை புள்ளி விபரங்கள் எமக்குத் தெளிவு படுத்துகின்றன. 1995ம் ஆண்டுகளில் 3.9 வீதமாக இருந்த முஸ்லிம் மாணவர்

பல்கலைக்கழக அனுமதி தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட போது 5.6 வீதமாக அதிகரித்து கடைசியாக பல்கலைக்கழக அனுமதி பெற்ற 2014/2015 ஆம் கல்வி ஆண்டில் முஸ்லிம்களின் கல்வி அனுமதி 8.7 வீதமாக அதிகரித்துள்ளதை பின்வரும் புள்ளிவிபரம் காண்பிக்கிறது.

**பல்கலைக்கழக அனுமதி**

**Academic Year**

| | | | |
|---|---|---|---|
| **2002/2003** | **சிங்களவர்கள்** | **10149** | **83.40%** |
| | **தமிழர்கள்** | **1427** | **11.72%** |
| | **முஸ்லிம்கள்** | **559** | **4.5%** |
| | **ஏனையோர்** | **33** | |
| | **மொத்தம்** | **12168** | |
| **2003/2004** | **சிங்களவர்கள்** | **10933** | **81.90%** |
| | **தமிழர்கள்** | **1685** | **12.62%** |
| | **முஸ்லிம்கள்** | **729** | **5.46%** |
| | **ஏனையோர்** | **02** | |
| | **மொத்தம்** | **13349** | |
| **2004/2005** | **சிங்களவர்கள்** | **11455** | **79.22%** |
| | **தமிழர்கள்** | **2080** | **14.38%** |
| | **முஸ்லிம்கள்** | **896** | **6.1%** |
| | **ஏனையோர்** | **28** | |
| | **மொத்தம்** | **14459** | |
| **2005/2006** | **சிங்களவர்கள்** | **13133** | **79.61%** |
| | **தமிழர்கள்** | **2268** | **13.74%** |
| | **முஸ்லிம்கள்** | **1059** | **6.4%** |

| | | | |
|---|---|---|---|
| | **ஏனையோர்** | **36** | |
| | **மொத்தம்** | **16496** | |

**(Sri Lanka University Statistics, 2006)**

**கடந்த இரண்டாண்டு பல்கலைக்கழக கல்வி அனுமதி**

| **கல்வி ஆண்டு** | **சிங்களம்** | **தமிழ்** | **முஸ்லிம்** | **வேறு** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| **2013/2014** | 20173 (80.05%) | 3017 (11.97%) | 1955 (7.95%) | 55 | 25200 |
| **2014/2015** | 20315 (79.10%) | 3203 (12.47%) | 2073 (8.07%) | 85 | 25676 |

**(Sri Lanka University Statistics, 2014 and 2015)**

இப்புள்ளி விபரங்களின் அடிப்படையில் முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி படிப்படியாக அதிகரித்து செல்வதை அறியலாம்.இருந்த போதிலும் வைத்தியத்துறை, பொறியியல் துறைகளில் முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி எதிர்பார்த்தளவு வரவில்லை என்பதையும் உணர முடிகிறது. உதாரணமாக 2013/2014 ம் ஆண்டில் முஸ்லிம் மாணவர்களில் வைத்தியத்துறை அனுமதி 6.4%மாகவும் 2014/2015ம் ஆண்டில் 7.3%வீதமாகவும் காணப்படுகின்றது. இலங்கை முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்தி பற்றி அக்கரையோடு சிந்திக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

**முடிவுரை**

இலங்கை முஸ்லிம்களின் கல்வித்துறை வரலாற்றில் ஏற்பட்ட பல்வேறு ஏற்றத்தாழ்வுகளையும், சவால்களையும், அந்நிய தலையீடுகளையும் இவ்வாய்வில் சுருக்கமாகப் பார்த்தோம். முஸ்லிம் சமூகம் ஏனைய சமுகங்களை விட சுமார் 60 – 70 வருடங்கள் கல்வித் துறையில் பின்னோக்கி இருந்ததையும் எம்மால் உணர முடிகின்றது. கல்வியின் பெறுபேறுகளை காட்டுகின்ற பல்வேறு பொறிமுறைகள் கல்வியியலாளர்களால் வகுக்கப்பட்ட போதும் பல்கலைக்கழக அனுமதியை மட்டும்

இலங்கை முஸ்லிம்களின் கல்விப் பின்புலத்தை வெளிக்கொணர இச்சிறிய ஆய்வில் நாம் ஆய்வுக்குட்படுத்தியுள்ளோம். இவ்வாய்வின் பெறுபேறாக இலங்கை முஸ்லிம்களின் கல்வித்துறை ஓரளவு வளர்ச்சியடைந்து வருவதை அனுமானிக்க முடிகின்றது. எவ்வாறெனினும் முஸ்லிம்களின் கல்வித் துறையின் அனைத்து பொறிமுறைகளும் ஆய்வுக்குட்பமுத்துவது காலத்தின் தேவையாகும்.

## References


- Shukri, M.A.M., **'Muslim Of Sri Lanka'**, Jamiya Naleemiya Publication, Sri Lanka, 1986
- Mohammed Halafi, 'History of Muslim Education, Beirut, 1954.
- Azees, A.M.A., 'The Education of Ceylon' – A centenary volume, Ministry of Education and Cultural affairs of Sri Lanka, 1969
- Wimalaratne, K.D.G., '*Muslim under British rulein Ceylon'* (1796-1948) **'Muslim Of Sri Lanka'**, Jamiya Naleemiya Publication, Sri Lanka, 1986.
- Mendis, G.C., **'British Empire in Ceylon',** Colombo, 1960.
- Silver Jubilee Souvenir, MICH, Colombo, 1965.